In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருஞ்ஜோதி | உ | அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை | | அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

வள்ளலார்

சுத்த சிவ மார்க்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

உ

திருச்சிற்றம்பலம்

அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்ஙனும் நான் சென்றே
எந்தைநினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலைமேல் சுத்த சிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செய்யினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச் சிவாயத்தை நான் மறவேனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் நூல் பதிப்பு

1.	வாழ்வியலுக்கு ஓர் வழிகாட்டி	2011
2.	தேவாரமே தேகத்திற்கு திருமருந்து	2017
3.	வாழ்வியலுக்கு ஓர் வழிகாட்டி (இரண்டாம் பாகம்)	2019
4.	சிவபுராணம் கடையனுக்கும் கதிமோட்சம்	2022
5.	சுத்த சிவ மார்க்கம் வள்ளலார் வழிபாடு	2023

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

என்னுரை -முன்னுரை

தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றியருளிய தெய்வநெறிச் சான்றோர்களின் திருக்கூட்டத்தில் அண்மைக் காலத்தில் வாழ்ந்த திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் வடலூர் இராமலிங்க அடிகளார் தலை சிறந்தவர் ஆவார்.

அவர் அளித்த தேனும், பாலும், அமிழ்தும், என்னத் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ் தெய்வத் திருப்பாடல்கள் "திருவருட்பா" என்னும் சிறப்பினைப் பெற்றுச் சிறந்து விளங்கி வருகின்றன.

இராமலிங்க அடிகளார் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் பெரிதும் ஈடுபட்டுத் தோய்ந்து நினைந்து இன்புற்றவர். ஆதலின் அவர்தம் திருவருட்பாப் பாடல்கள் "திருவாசகம்" போலவே மிக்க கனிவும், கசிவும், உருக்கமும், எளிமையும், இனிமையும், தெளிவும் மிக்கச் சிறந்தொளிர்கின்றன. கருங்கல் மனத்தையும் கரைந்து உருகச் செய்யும் பெருஞ்சிறப்புடையனவாகத் "திருவருட்பா" பாடல்கள் விளங்குவதை அன்பர்கள் அனைவரும் அறிவீர்.

பக்தியுணர்வும் சமய ஒழுக்கப் பண்பாடும் வாய்ந்து திகழும் அன்பர்கள் அனைவருக்கும் "திருவருட்பா" முழுவதுமே ஒப்புயர்வற்ற களஞ்சியமாகும் என்று கூறுதல் மிகையாகாது. மிகவும் சிறப்பாக பெரிதும் போற்றத் தருவதாக திகழ்வது "அருட்பெருஞ்ஜோதி அகவல் " என்பது அன்பர்கள் அனைவரும் அறிந்ததே.

நமது அழகு தமிழ்மொழிச் சொற்களை வளைத்து வில்லாக்கி, அழகு பாடல்களை அம்பாக்கி, தொடுத்து நம் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவர் வள்ளலார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணிவாசகர் இறைவனை "ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்ஜோதி " என்று சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார். அதன் அருமைப் பாட்டினை உணர்ந்த அருட்பெருஞ் சான்றோராகிய தாயுமான சுவாமிகள்,

"ஆதி அந்தம்" இல்லா அரிய பரஞ்சோதியென்ற நீதிமொழி கண்டு அதுவாய் நிற்கும் நாள் எந்நாளோ " என்று அதனைப் புகழ்ந்து போற்றி வியந்து உருகுகின்றார். இறைவனை ஜோதி வடிவமாகத் திகழ்கின்றான் என்பதனை எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றி உடன்பட்டுக் கொள்கின்றன.

ஆதலின் "சமரச சுத்த சன் மார்க்கம் " என்னும் உலகப்பொது நெறியை உலகுக்கு உணர்த்தி அருளிய நமது இராமலிங்க அடிகளாரும் அதனையே பெரிதும் சிறப்பாக விரித்து விளக்கிப் பாடியருளிய செந்தமிழ் பனுவலே "அருட்பெருஞ்ஜோதி அகவல் " ஆகும்.

திருவருட் பிரகாச வள்ளல் பெருமான் அருளிச் செயலாக்கிய திருவருட்பா ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளது. ஐந்து திருமுறைகளினும், ஆறாம் திருமுறை சிறந்தது. அதனுள்ளும் "அருட்பெருஞ்ஜோதி அகவல் " மிகச் சிறந்தது. திருவருட்பாவை ஒரு ஞான உடம்பாகக் கொண்டால், அதன் முகம் ஆறாம் திருமுறை, அதன் கண் அருட்பெருஞ்ஜோதி அகவல், அக்கண்ணுள் மணியாகத் திகழ்வது "அருட்பெருஞ்ஜோதி " என்னும் மந்திரம்.

இத்தகைய எல்லையில்லா " அருட்பெருஞ்ஜோதி அகவல் " 1596 வரிகளைக் கொண்டதாகும். இதனை அடிகளார் தமது திருக் கரத்தினாலேயே தமது அழகிய கையெழுத்தில் அப்போது அகப்பட்ட சாதாரணக் காகிதத்தில் 24-தாள்களில் கடுக்காய் மை கொண்டு எழுதியருளியுள்ளார்கள்.

அருட்பெருஞ்ஜோதி என்று தொடங்கி அருட்பெருஞ்ஜோதி என்று முடியும் இவ்வகவலை ஒருவர் பொருளறியாது ஓதினும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருஞ்ஜோதி என்ற மந்திரத்தை ஓராயிரம் முறைக்குமேல் ஓதிய புண்ணியம் உண்டாம். (அகவலின்) பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து என்பார் மணிவாசகர்.

பெருமானின் கையெழுத்துப் பதிப்பாகிய இது வாசிப்பதற்கு மட்டுமின்றிப் பூசிப்பதற்கும் உரியது. அன்பர்கள் அனைவரும் வாங்கி பூசித்தும் வாசித்தும் பயன்பெறுவார்களாக.

இந்நூல் வெளியீட்டுக்குரிய நன்முயற்சிகள் எடுத்துக் கொண்டவர்கள் சிவ. ஆ. சந்திரசேகரன், மு. வினோத்கண்ணன், ர. பன்னீர்செல்வம், ப. திலகம் ஆகியோர்களுக்கும், இந்நூலை அச்சிட்ட தமிழ்செல்வன் அச்சக உரிமையாளர் சிவ. நாகராஜன் ஐயா அவர்களுக்கும், தொழில் நுட்ப ஊழியர்களுக்கும், இந்நூலை பெற்றுக் கொண்ட அனைவரும் படித்து வாழ்வில் பயனடைய வேண்டும் என்றும் திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவடி மலர்களை அன்புடன் போற்றிப் பணிந்து வழிபடுகிறேன்.

அடியவன்.
அருள்நிதி. சிவ. தன. நடராஜன்
லாஸ்பேட்டை, புதுச்சேரி – 8.
கைபேசி : 9345193054



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

வள்ளலார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருஞ்ஜோதி உ அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

திருஅருட்பிரகாச வள்ளலார் சுத்த சிவ மார்க்கம்

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளார் பாடி அருளியபாடல்களின்தொகுப்பு"திருவருட்பா"எனும்பெயர்பெற்றது. திருஞானசம்பந்தரின் அருளிச் செயல்கள் "திருக்கடைக்காப்பு" எனப் பெயர் பெற்றது. திருநாவுக்கரசரின் அருளிச்செயல்கள் "தேவாரம்" எனப் பெயர் பெற்றது. சுந்தரின் அருளிச்செயல்கள் "திருப்பாட்டு" எனப்பெயர் பெற்றது. மொத்தத்தில் இம்மூவர் பாடல்களையும் சேர்த்து "தேவாரம்" என்றும் சொல்வர். திரு வாதவூரராம் மாணிக்கவாசகரின் அருளிச்செயல்கள் "திருவாசகம்" எனப்பெயர் பெற்றது.

ஆனால், இடைக்காலத்தில் பாடியவர்களின் பாடல்கள் அவ்வாறு தனியே பெயர்பெறாமல் குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு, சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிரபந்தத்திரட்டு என பாடியவர் பெயரோடு சேர்த்து வழங்கலாயிற்று. " பிரபந்தத்திரட்டு" என்பதற்கு "நூல்களின் தொகுப்பு " என்பது பொருளாகும்.

வள்ளல் பெருமானின் பாடல்களோ இடைக்காலத்துப் புலவர்களின் பாடல்கள் போல "இராமலிங்கர் பிரபந்தத்திரட்டு எனப்பெயர் பெறாமல், நால்வரின் அருளிச் செயல்கள் தனியே பெயர் பெற்றது போல " திருவருட்பா " எனத் தனிப்பெயர்பெற்றது.

இந்த உலகத்தில் பக்தர்கள் பலர். ஞானிகள் பலர். சிறந்த அடியார்கள் பலர், வீரர்கள் பலர், பதிவிரதைகள் பலர், ஆனால், அள்ளிக்கொடுத்த வள்ளல்கள் சிலர். வள்ளல்களுக்குத்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணிக்கையுண்டு முதலேழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் என்று கூறுவார்கள்.

முதலெழு வள்ளல்கள் :-

செம்பியன், குமணன், விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன்.

இடையெழு வள்ளல்கள் :-

அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், கண்ணன், அரிச்சந்திரன்.

கடையெழு வள்ளல்கள் :-

அதியமான், பாரி, நள்ளி, ஆய், பேகன், ஓரி, காரி.

இவ்வாறு வள்ளல்கள் இருபத்தொருவர் என்று எண்ணிக்கை உண்டு.

ஒருவன் விடிய விடியப் பேசுவான். அறம் செய்யமாட்டான். வாழ்க்கை நீர்மேற் குமிழி என்று பேசுவான், ஆனால் அறம் என்று சொன்னால் ஐம்பது மைல் ஓடுவான். பேசுவது சுலபம், கொடுப்பதுதான் கடினம்.

வேட்டையாடி அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான் ஒரு குறுநில மன்னன் வழியிலே ஒரு முல்லைக்கொடி, தாவிப்படரக் கொம்பில்லாமல் தள்ளாடித் தத்தளிப்பதைக் கண்டான். உள்ளம் துடித்தான். கண்ணீர் வடித்தான். என் நாட்டிலே ஒரு முல்லைக் கொடி தாவிப்படரக் கொம்பில்லாமல் தவிக்கலாமா என்று மனம் இரங்கினான். தேரை விட்டு இறங்கினான். பிறகு தன் மணித் தேரிலே முல்லைக் கொடியைப் பரவவிட்டு, நடந்துபோனான், அரண்மனைக்கு, அவன் தான் பறம்பு நாட்டை ஆண்ட பாரி மன்னன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதிலிருந்து என்ன தெரிகிறது?

தாவரம் - ஓரறிவு
ஊர்வன - ஈரறிவு
நீர் வாழ்வன - மூவறிவு
பறப்பன - நாலறிவு
நடப்பன - ஐயறிவு
மனிதனுக்கு - ஆறறிவு

ஒரு வீட்டிற்குச் சென்று அந்த வீட்டிலுள்ள பெண்மணியிடம் " அம்மா ஐயா எங்கே " என்று கேட்டால் "அது எங்கே போச்சோ " என்று அஃறிணையில் பதில் வரும்.

அதனால்தான் சுந்தரமூர்த்தி நாயனார்

"கொடுக்கிலா தானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பாரிலை " - என்பார்.

அருணை முனிவரோ வண்புகழ் பாரி, காரி - என்பார்.

இப்படி அள்ளிக் கொடுத்த வள்ளல்கள் சிலரே, காதில் உள்ள கவச குண்டலத்தை அறுத்துக் கொடுத்தான் கர்ணன். சிரத்தைக் கொடுக்க முயன்றான் குமணன். இவ்வாறு வழங்கியவர்கள் எல்லாம் வள்ளல்கள். ஆனால் இராமலிங்க சுவாமியோ வள்ளலார் ஏழை சந்நியாசி இவர் என்ன கொடுத்தார்? அருளைக் கொடுத்தார்.

வள்ளல்கள் தந்தது பொருள், வள்ளலார் தந்தது அருள். பொருள் செலவழியும் அருள் செலவழியாது. "வாடியபயிரை கண்ட போதெல்லாம் வாடியவர் வள்ளலார்.'

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு புனிதமான காலம். பற்பல மகான்கள் அவதரித்த காலம். இராமகிருஷ்ண பரமஹம்சர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் சைவர்களுக்கு அவர் பெருமை தெரியும் மாதரை மனத்தாலும் தீண்டாதவர், தியாகராஜ சுவாமிகள் 96 கோடி ராம மந்திரத்தை எழுதியவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்நாடக சங்கீதமூர்த்தி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் (பத்து கம்பன் என்று போற்றப்பட்டவர்) மகாவித்துவான் வைத்தியநாத ஐயர் (சங்கரா பரணத்தை இவர் பதினாறு நாள் பாடினார் என்பர்.)

நந்தனார் கீர்த்தனையைப் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் (இவரது கீர்த்தனைகள் நரம்பை மீட்டும் ஜீவ சுரங்களாக மிளிரும்.)

சரபம் தண்டபாணி சுவாமிகள், முருகப்பெருமானை நேரில் தரிசித்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்

இவர்கள் வாழ்ந்த அந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிதம்பரத்திற்கும் விருத்தாசலத்துக்கும் மத்தியில் மருதூர் என்னும் சிற்றூர். அவ்வூரில் கருணீகர் மரபில் வந்தவர் இராமையா பிள்ளை நிரம்ப ஒழுக்கசீலம் உள்ளவர். திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்துக் குடும்பத்தை நடத்தி வந்தார். அவருக்கு சுக்கிரன் நீச்சம் களத்திரகாரகன் ஏழாம் இடத்தில் பாபக்கிரகங்கள். அதனாலே திருமணம் செய்து கொண்ட மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். மீண்டும் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அந்த மனைவியும் இறந்து விட்டார். இப்படியே ஐந்து மனைவிகள் அனைவரும் காலமாகி விட்டனர்.

அடுத்து சென்னைக்கு வடக்கே பொன்னேரிக்குப் பக்கத்தில் சின்னக்காவணம் என்னும் ஊரில் குலநலம் வாய்ந்த சின்னம்மை என்னும் பெண்மணியை ஆறாவது மனைவியாக மணந்து கொண்டார். அவரது மணிவயிறுதான் வள்ளலாரைப் பெற்றது. அந்த அம்மையார் கணவனார் குறிப்பறிந்து நடப்பார். காதல் இருவர் கருத்தொருமித்து இல்லறமாகிய நல்லறத்தை நடத்தி னார்கள். அவர்களுக்கு முதலில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. சபாபதி என்று பேரிட்டார்கள். மறுபடியும் ஓர் ஆண் குழந்தை பரசுராமன் என்று பெயரிட்டனர். அடுத்து இரண்டு பெண் குழந்தைகள் உண்ணாமுலை, சுந்தராம்பாள் ஆக ஆணிரண்டு, பெண்ணிரண்டு, சிலகாலம் குழந்தைகள் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராமையாவுக்கு வருமானம் போதவில்லை கருங்குழியிலே கிராமக் கணக்கு வேலை பார்த்து வந்தார் நாட்கள் நகர்ந்தன. ஒரு மார்கழி மாதம் அன்று திருவாதிரை நாள். சிவபெருமானுடைய அட்ட விரதங்களில் திருவாதிரையும் ஒன்று. இறைவன் திருவாதிரையை போன்றவர் திருவாதிரை சிறந்த நட்சத்திரம் சூரியனுடைய விட்டம் (குறுக்களவு) 1,60,000 மைல். அப்படி 300 சூரியன் சேர்ந்தால் எவ்வளவு பிரமாணமோ அவ்வளவு பிரமாணம் திருவாதிரை நட்சத்திரம் நம் கண்ணுக்கு அது நெற்றிப் பொட்டு மாதிரி தெரியும். அந்த திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்து ஒளி புறப்பட்டால் 200 ஆண்டுகள் ஆகும் மண்ணுலகத்திற்கு வர அவ்வளவு பிரம்மாண்டமான நட்சத்திரம் திருவாதிரை.

அந்த திருவாதிரையன்று காலையில் நீராடி நித்திய வழிபாடு செய்துவிட்டு கருங்குழி கிராமக் கணக்கு வேலைக்கு இராமையா சென்று விட்டார். சின்னம்மை சமையல் வேலையெல்லாம் முடித்து விட்டு நடராஜாவுடைய திருவுருவத்திற்கு பூஜை செய்துவிட்டு கணவனார் வருகைக்கு வழிமேல் விழிவைத்து பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏதோ அலுவல் காரணமாக வீட்டுக்கு வர வில்லை. அப்போதெல்லாம் வீடுகளில் குடுமிக் கதவு இருக்கும் கதவை தாளிட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். தெருவில் யாராவது போனால் கணவர்தான் வருகிறார் என்று கதவை திறந்து பார்ப்பாள் கணவனாரில்லை. பிறகு கதவை மூடிவிடுவாள். இப்படி கதவை திறப்பதும் மூடுவதும் இரவு முழுதும் செய்தாள் அதனால் அந்தக் கதவின் குடுமி தேய்ந்து விட்டதாம் அத்துணை கணவன் மேல் உள்ள பக்தி, அன்பு.

" வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி வடிவளவும் தேயும் "

என்று "செயங்கொண்டார்" கலிங்கத்துப் பரணியில் பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு சின்னம்மை கணவனாரை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார். பகல் ஒரு மணி கணவனார் வரவில்லை. இறைவன் சிவயோகியாக வருகின்றார். அம்மா நான் " அருந் தபசி " இப்போது அருந்த பசி என்கின்றார். பெருமானே வருக வருக என்று வரவேற்றுக் கை கால் அலம்ப நீர் கொடுத்து கூடத்தில் அமரசெய்து தலைவாழையிலை இட்டு காய்கறி அன்னமெலாம் படைத்தார். பின்னர் சின்னம்மை உள்ளே போனார். சுவாமி இலையிலுள்ளதை மறைத்துவிட்டார். சுவாமி சாப்பிட்டு விட்டாரா என பின் வந்து இலையை பார்த்த சின்னம்மை, சுவாமி இன்னும் கொஞ்சம் ஆகாரம் என்றார். அம்மா சந்நியாசிகள் எட்டு கவளந்தான் சாப்பிட வேண்டும். எட்டு தடவையல்ல போதுமம்மா என்றார். உண்டு முடித்த சிவயோகி திருநீறு வழங்கினார். இந்த திருநீற்றில் சிறிது வாயிலிட்டுக் கொண்டு சிறிது நெற்றியில் இட்டுக் கொள். உனக்கு "மெய்ஞ்ஞானக் குழந்தை" ஒன்று பிறக்கும் அந்தக் குழந்தையால் "இந்த உலகம் வாழும் " வாழ்க என்று கூறிவிட்டு சுவாமி சிறிது தூரம் சென்று ஜோதி வடிவாக மறைந்து விட்டார்.

அம்மையார் திடுக்கிட்டார். ஆண்டவனே நம் வீட்டுக்கு எழுந்தருளியிருக்கின்றார் கைக்கெட்டியது வாய்க்கு எட்டாது போச்சே வந்தவர் திருவடியைப் பற்றிக்கொண்டு பிறவிப் பிணிக்கு மருந்து கேளாமல் விட்டு விட்டேனே அந்தோ கெட்டேன் என்று அழுது தொழுது திருவருளை நினைந்து வியந்திருந்தார்.

கணவனார் வந்தார் மனைவி கலங்கியிருப்பதை கண்டார். ஏன் என்று கேட்டார். சுவாமி, ஆண்டவனே ஒரு சித்த சிவயோகியாக வந்தார் அன்னம் கேட்டார் படைத்தேன். "உனக்கு ஒரு ஞானக்குழந்தை பிறக்கும் " என்று ஆசி கூறி திருநீறு கொடுத்துவிட்டு ஜோதியாக மறைந்து விட்டார். சுவாமி என்றாள்.

பெண்ணே தெய்வத்திற்கு அன்னம் படைத்த உன்னை எனக்கு இறைவன் மனைவியாகக் கொடுத்தானே. நீ அன்னம் படைக்கின்றபொழுது நான் விசிறி கைங்கர்யம் செய்து கொடுத்து வைக்கவில்லையே. நீ செய்த புண்ணியத்தில் லட்சத்தில் ஒரு பங்கு கூட நான் செய்யவில்லையே என்று கூறி நின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது மார்கழி மாதம். அந்த மாதமே சின்னம்மை கருக் கொண்டார். சுபானு வருடம் புரட்டாசி மாதம் 21-ந்தேதி (5-10-1823) ஞாயிற்றுக்கிழமை உதயாதி பூர்வ பட்சம் 29 1/4 நாழிகை மீன லக்னம் சித்திரை நட்சத்திரம் துதியை துதி ஆகியவை பொருந்திய நன்னாளில் துலா ராசியில் விடியற்காலம் அப்போதுதான் கோயில்களில் வழிபாடு செய்யும் நேரம் சுவாமிகள் ஞான பானுவாக அவதரிக்கின்றார்கள். பெயர் சூட்டினார்கள் இராமலிங்கம் பெயரிலேயே ஒரு சமரசம் "இராம – லிங்கம்" வைணவமும், சைவமும் இணைந்த பெயர்.

ஐந்து மாதங்களுக்குப் பின் குழந்தை இராமலிங்கரை அழைத்துக்கொண்டு பெற்றோர் சிதம்பர தலத்தில் எழுந்தருளி இருக்கும் நடராஜப் பெருமானைத் தரிசிக்கச் சென்றனர். நடராஜ சந்நிதியை அடைந்ததும் அக மகிழ்ந்து குழந்தை.

கலகல வென்று சிரித்தது. ஐந்து மாதக் குழந்தை நடராஜர் சந்நிதி முன்னே கலகலவென்று நகைப்பதைக் கவனித்த "அப்பைய தீட்சதர் " இந்தக் குழந்தை ஒரு தெய்வீகக் குழந்தை என்பதை தெரிவித்தார். உடனே அவர் குழந்தையின் தந்தை இராமையாப் பிள்ளையிடம் ஐயா ! இந்த குழந்தை. தெய்வீக அருள்பெற்ற குழந்தை நடராஜரின் அருட்பார்வை குழந்தைமேல் பட்டது. அஞ்ஞானத்திரை அறுந்தது மெய்ஞ்ஞான விளக்கம் தோன்றியது. பிறகு தீட்சிதர் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று அமுது செய்வித்தார். சுவாமி தரிசனம் முடித்துக்கொண்டு இராமையா பிள்ளை குடும்பத்துடன் மருதூர் திரும்பினார்.

இராமலிங்கர் ஆறு மாதக் குழந்தையாய் இருக்கும்போது அவருடைய தந்தை இராமையாப் பிள்ளை காலமானார்.

சின்னம்மை பெரிதும் வருந்தினார். கணவன் போனால் என்ன இருக்கிறது. ஐந்து குழந்தைகள். திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியருக்கு என்ன சொத்திருக்கும் ஐந்து குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சின்னக்காவணம் போய் தமையனார் கால் மேல் விழுந்து அழுதார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“அண்ணா என் நிலையைப் பார்த்தீர்களா ” என்ன செய்வது அம்மா விதி விளையாடிவிட்டது. விதியை வெல்பவர் யார் அம்மா அழாதே அப்பா தேடிய கொஞ்சம் நிலபுலம் இருக்கிறது. நான் சாப்பிடுகின்ற அரை வயிற்றுக் கஞ்சியை நீயும் சாப்பிடு என்று அண்ணன் ஆறுதல் கூறினார். சின்னம்மை அண்ணன் ஆதரவில் காலந் தள்ளலானார் வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்து குழந்தைகளைக் காப்பாற்றினார்.

அண்ணன்தான் கூடப் பிறந்தவர் பிரியமாக இருக்கின்றார். அவர் மனைவி கூட பிறக்கவில்லையே அண்ணி தினமும் கரித்துக் கொட்டுவாள். எங்கெங்கோ வருதே “வைசூரி நோய்” உங்களுக்கு வரவில்லையே என்று தினமும் “ அஷ்டோத்திர அர்ச்சனை” சின்னம்மை அத்தனையும் பொறுத்துக்கொண்டு இருந்தார்.

வினையை நோவதைத் தவிர யாரை நோவது? ஒருநாள் காலையில் பழையது சாதம் உண்ணுகிறான் மூத்த மகன் சபாபதி. பார்க்கிறாள் மாமன் மனைவி “ பன்றியைப் போல திண்கிறாயே ” என்று வைகிறாள். குழந்தை உள்ளம் துடித்து கொதித்து எழுந்தான். இனி இந்த வீட்டில் சாப்பிட மாட்டேன்.

“ மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின் – திருவள்ளுவர்.

என்னும் குறளைத் தெரிந்து வைத்திருக்கிறேன் அம்மா, சென்னைக்குப் போய் பிழைத்துக்கொள்ளலாம் எப்படியாவது உங்களை நான் காப்பாற்றுகிறேன் என்றான் சபாபதி.

அண்ணா, தன்னை வணங்கிய தங்கையைப் பார்த்து என்னம்மா என்று தமையனார் கேட்கிறார். அண்ணா, தாங்கள் காமதேனுவைப் போல் எங்களுக்கு உதவி செய்தீர்கள். அண்ணியோ கற்பக விருட்சம் போல் கருணை காட்டினார்கள். தன் மலர் வாயினாலே அந்தப் பொல்லாத அண்ணியை கற்பக விருட்சம் என்றார், என்னே பெருந்தகைமை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாங்கள் சென்னை சென்று வாழலாம் என்று இருக்கிறோம் என்றாள் சின்னம்மை. மனைவியின் கொடுமையால்தான் உடன் பிறந்தவள் ஊர் விட்டு ஊர் செல்கிறாள் என்பதைஉணர்ந்த தமையனார் மவுனமாக தலையை அசைத்து, பின் தன் மனைவிக்கு தெரியாமல் ஐம்பது ரூபாய் கொடுத்து அனுப்புகிறார், அன்னையும் ஐந்து குழந்தைகளும் சென்னையை அடைந்தனர். சென்னையில் ஏழு கிணறு என்னும் பகுதியில் ஒரு சிறு வீட்டை வாடகைக்குப் பிடித்துக் கொண்டனர்.

சின்னம்மை அந்த பகுதிகளிலுள்ள தனவந்தர் வீடுகளில் பாத்திரந் தேய்த்தல், துணி துவைத்தல் முதலான வேலைகளைச் செய்து குழந்தைகளை காப்பாற்றி வரலானார்.

மூத்தவரான சபாபதி புரசைவாக்கத்திலிருந்த காஞ்சிபுரம் "அட்டாவதானம் சபாபதி " முதலியாரிடம் தமிழ் பயின்றார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய பஞ்ச இலக்கணங்கள் இலக்கியங்கள் முதலியவற்றை கற்றுத் தேர்ந்தார். பின்னர் அங்கங்கே சொற்பொழிவு செய்தார். வருவாய் குறைவாக இருந்தாலும் அதைக் கொண்டு குடும்ப செலவு செய்து கண்ணியமாக வாழ்ந்து வந்தார். சின்னம்மை தன் இரண்டாவது மகனை (பரசுராமன்) படிக்கவைத்து கருங்குழியில் கணவனார் செய்து வந்த கணக்கர் வேலைக்கு அனுப்பினார்.

இரண்டு பெண்களை (உண்ணாமுலை, சுந்தராம்பாள்) நல்ல இடமாகப் பார்த்துத் திருமணம் செய்து கொடுத்தார். மூத்த மகன் சபாபதிக்கு பாப்பாத்தி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தார், மருமகள் நல்ல குணவதி.

இப்போது சென்னையில் மூவர் மட்டும் வாழ்கிறார்கள். சபாபதி, பாப்பாத்தி, வள்ளலார். தாயார் (சின்னம்மை) இரண்டாவது மகன் பரசுராமனுக்கு துணையாகக் கருங்குழிக்குச் சென்று விட்டார்.

வள்ளலார் வளர்மதிபோல் வளர்கின்றார். பரமஞானியாக ஓதாது உணர்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வப்போது அண்ணிக்கு வேதாந்த தத்துவங்களைச் சொல்லுவார். அண்ணி, இந்த உடம்பு அசித்து, ஆன்மா சித்து அசித்ததாகிய உடம்போடு சித்தாகிய ஆன்மா சேரக் கூடாது. ஆனாலும், சேர்ந்திருக்கிறது. அண்ணி, கோயிலுக்கு கொண்டுபோன பொருள்களெல்லாம் வெளியே வரும். தேங்காய், பழம், பூ, வெற்றிலைப்பாக்கு, ஆனால் ஒரே ஒரு பொருள் மட்டும் வெளியே வராது அது என்ன அண்ணி என்று கேட்டார். பாப்பாத்திக்கு புரியவில்லை, குழப்பமும் கூட தம்பி நீயே சொல்லிவிடப்பா.

அதுதான் கற்பூரம். அந்த கற்பூரம் ஜோதியிலே ஒன்றுவது போல சீவன் சிவனுடன் ஒன்றிவிட வேண்டும். அதுதான் சிவாத்வைதம் அந்த இரண்டற்ற வேளையில்தான் இன்பம் வருகிறது.

இதை,

தீதணையாக் கற்பூரத் தீபமென நான்கண்ட
" ஜோதியுடன் ஒன்றித் துரிசறுப்ப தெந்நாளோ
என்று தாயுமானவர் கூறுகிறார்.

கற்பூரத்தில் இவ்வளவு தத்துவம் உள்ளதா என்று அண்ணி வியக்கிறார். அண்ணி, கோயிலில் தேங்காய் ஏன் உடைக்கிறார்கள் எனக்கு தெரியவில்லை நீயே போட்டு உடையப்பர்.

தேங்காய்க்கு மேலே பச்சையாயிருக்கின்ற மட்டை மாயாமலம். உரிச்சி எடுக்கின்ற நார் கன்மமலம், உடைக்கப்படும் ஓடு ஆணவ மலம், இந்த ஆணவம், மாயை, கன்மம் என்கிற மூம்மலங்களும் போன பிறகு, " சுத்த சித்தி " என்னும் பருப்பு கிடைக்கும் அதனால் தேங்காய் உடைக்கிறார்கள்.

மேலும், இன்னும் கோயில் கர்ப்பக்கிரக நுழைவாயிலில் " துவாரபாலகர் " என்று இருவர். ஒருவர் ஒரு விரலைக் காட்டுவார். அது பரமாத்மா ஒருவரே என்ற குறிப்பை உணர்த்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னொருவர் இல்லையென்ற பாவனையில் கையைத் திருப்பிக் காட்டுவார். ஒன்றேதான் இரண்டாவதில்லை பரமாத்மா ஒன்றே, தங்கம் ஒன்று அணிகள் பல, மண் ஒன்று பானை சட்டி, மடக்கு, அகல் முதலியன உருவாதல்போல் இறைவன் ஒருவன்தான் பல்வேறு வடிவம் தாங்கி வருகிறான் " ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் " என்று கூறுவார் திருமூலர்.

ஒரு நாள் வள்ளல்பெருமானார் தன் தமையனார் குருவாகிய "அட்டாவதானம் சபாபதி" முதலியார் அவர்களைக் காண்கின்றார்.

தம்பீ நீ என்ன வாசிக்கின்றாய்? என்று கேட்டார். பெருமானுடைய திருவருள் நாட்டம் வந்தவர்களுக்கு நூல் பயன்படாது. பெருமானார்க்கு இளமையிலேயே அவ்வளவு திருவருள் தாகம்.

" இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது
மற்று என்று வருமோ அறியேன் எம் கோவே – துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம் "

முதலியார் வியப்புடன் தம்பீ இது யார் பாடின பாட்டு என்றார். அதற்கு வள்ளலார் " நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை " என்றார். சபாபதி முதலியாருக்கு பரம சந்தோஷம். வள்ளலார் ஓர் அவதார புருஷர் என்று எண்ணினார். குளத்தில் தாமரைக்கருகிலுள்ள தவளை தாமரையிலுள்ள மதுவை உண்ணாது அழுக்கைத் தின்னும், அதுபோல கூடப்பிறந்த தம்பியின் அருமை பெருமைகளை அண்ணன் சபாபதி பிள்ளை உணராமற் போனார்.

ஒரு நாள் அடித்தும் விரட்டி விட்டார். வள்ளலாருக்குத் தாங்க முடியாத பசி தோட்டத்து வழியாக போய் அண்ணியார் கொடுக்கின்ற உணவை உண்டார். ஒரு நாள் அவருடைய தகப்பனாரின் திவசம் எல்லோரும் வந்து உணவு உண்டார்கள். வீட்டுப் பிள்ளை உண்ணவில்லை. மாலை நேரம் வள்ளலாருக்கு வயிறு முதுகில் ஒட்டியது பசி. தோட்டத்துப் பக்கமாகப் போனார் அண்ணி வரவேற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இலை போட்டு ஆறிப்போன அன்னத்தைப் படைத்து இராமலிங்கம் இன்றைக்கு “ உங்க அப்பா திவசம் ” என்றாள்.

தம்பி உன் அண்ணா சொற்படி கேட்டு ஒழுங்காக படித்துக்கொள் என்றாள். நல்லது அண்ணி, மேல் மாடியிலே ஒரு தனி அறை வேணும். ஒரு திருவிளக்கு வேணும். ஒரு நிலைக் கண்ணாடி வேணும். நானே படித்துக் கொள்கிறேன். இந்த அளவுக்கேனும் தம்பி ஒப்புக்கொண்டானே என்று அவர் கேட்ட பொருள்களை எல்லாம் அண்ணியார் கொடுத்தார். மேல் மாடியில் ஒரு தனியறை நிலைக்கண்ணாடிக்கு முன்னர் அந்தத் திருவிளக்கை ஏற்றிவிட்டு நிஷ்டையில் அமர்ந்தார் வள்ளலார். கண்ணாடியில் எதிரிலிருக்கும் உருவங்கள் தானே தெரியும் ஆனால், கண்ணாடிக்கு எதிரில் அமர்ந் திருக்கும் வள்ளலாருக்குக் கண்ணாடியில் தானோ, திருவிளக்கோ தெரியவில்லை எரிகின்ற சுடர் மட்டும் தெரிகின்றது. ஆகவே அந்த ஜோதியை மட்டும் பார்த்து அதிலே நிலைத்து நிற்கின்றார் வள்ளலார். அந்த ஜோதி உள்ளேயும் தெரிகின்றது. வெளியேயும் தெரிகின்றது. ஆண்டவன் ஜோதி வடிவமாக இருக்கின்றான் என்பதை புரிந்து கொண்டு பயிற்சி செய்கின்றார் அப்போது வள்ளலாருக்கு “வயது ஒன்பது” ஒரு நாள் அந்த கண்ணாடியில் திருத்தணி முருகன் காட்சியளிக்கின்றான்.

“ சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிருதோள்களும் தாமரைத் தாள்களுமோர்
கூர்கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமுமென் கண்ணுற்றதே ”

என்று அந்த இறைக்காட்சியைக் கண்டு அனுபவித்துப் பாடுகிறார்.

தமையனார் சபாபதி பிள்ளை சோமு செட்டியார் என்பாரது வீட்டில் வாராவாரம் பெரியபுராணம் பிரசங்கம் செய்வார். ஐம்பது பேர் வருவார் “பிரசாதம் இருப்பதனால் கதை முடியும் வரை அத்தனைப்பேரும் இருப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு நாள் சபாபதி பிள்ளைக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. சொற்பொழிவுக்கு போக முடியாத நிலை அதனால் அவர், தம்பியை அழைத்து " தம்பி இராமலிங்கம் " எனக்கு காய்ச்சல் வந்துவிட்டது. சோமு செட்டியார் வீட்டில் பலபேர் வந்து காத்திருப்பார்கள் நீ போய் எனது அசௌகரியத்தைக் கூறி நடராஜர் படத்துக்கு தீபாராதனை காண்பித்து, முடிந்தால் இரண்டு வரி சொல்லிவிட்டு வாப்பா என்றார்.

" அப்போது சுவாமிக்கு வயது பத்து " செட்டியார் வீட்டிற்கு ஒற்றை மாட்டு வண்டியில் போனார். சுவாமி சென்று சோமு செட்டியாரைப் பார்த்துக் கும்பிட்டார். தங்கப் பதுமை மாதிரி இருந்த சிறுவன் தன்னை வணங்குவதைக் கண்டு விசாரித்தார்.

" தம்பி யாரப்பா நீ "

இங்கே சொற்பொழிவு செய்ய வருவாரே அவருடைய தம்பி நான்,

" அவரெங்கே "

அண்ணாவுக்கு ஜுரம் அதற்காகத்தான் என்னை அனுப்பினார். சூடத்தைக் காட்டி இரண்டு வரி சொல்லிவிட்டு வரச்சொன்னார். செட்டியார் நல்லது செய் என்றார். வள்ளல்பெருமானார் நடராஜர் படத்துக்குச் சூடம் காட்டிவிட்டு,

" உலகெலாம் உணர்ந்து தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம் "

பெரிய புராணத்தின் முதற்பாடல் இது (சேக்கிழார்)
உலகு என்பது மண் (பிருதிவி)
நீர்மலி என்பது தண்ணீர் (அப்பு)
ஜோதி என்பது நெருப்பு (தேயு)
ஆடுவான் என்பது காற்று (வாயு)
அம்பலம் என்பது (ஆகாசம்)
பஞ்ச பூதங்களையும் வைத்து பாடினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுதான் அவருக்கு முதல் சொற்பொழிவு இந்த பாடல் 63 - அடியார்களையும் தெரிவிக்கும் பெரிய புராணத்தின் முதற்பாடல்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்	-	16
நிலவு லாவிய நீர்மலி வேணிய	-	13
னலகில் ஜோதிய னம்பலத் தாடுவான்	-	16
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்	-	18
தனியடியார்கள்	-	63
உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்	-	20
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்	-	15
அலகில் ஜோதியன் அம்பலத்து ஆடுவான்	-	18
மலர்சி லம்புஅடி வாழ்த்தி வணங்குவோம்	-	19

தனியடியார் 63, தொகையடியார் - 9, ஆக 63 + 9 = 72

இப்படி தத்துவார்த்தமாக ஏழு மணிக்கு ஆரம்பித்த பிரசங்கம் முடிய நள்ளிரவு 12.00 மணியாயிற்று. ஆறு மணி நேரம் அமுத மழை பொழிந்தார். எல்லோரும் வணங்கி ஐந்து, பத்து என்று காணிக்கை கொடுத்தனர். சோமு செட்டியாருக்கு சொல்லி முடியாத சந்தோஷம். இனிமேல் உங்கள் அண்ணா வேண்டாம் தாங்கள் வாராவாரம் வந்து தத்துவார்த்த மழை பொழிய வேண்டும் என்றார். எல்லாம் "சிவன் செயல்" என்று சுவாமிகள் வண்டியில் ஏறிக் கொண்டார். காணிக்கையாக வந்த பணத்தையெல்லாம் ஒரு துணியில் முடிந்து வண்டியில் வைத்தனர். சுவாமி போகின்ற வழியில் அத்தனையும் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டார்.

"பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான்
படைத்த அப்பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்.

"பொருளாசை இல்லாத புனிதர்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுவாமி வீட்டிற்கு சென்று கதவை தட்டுகிறார்.

கதவை திறந்த சபாபதி "இராமலிங்கம் " என்ன ஆனது ஏன் இவ்வள்வு நேரம். உங்கள் உத்தரவுப்படி இரண்டு வரிதான் சொன்னேன் மணி பன்னிரண்டாகி விட்டது. நான் மணிக்கு அறுபது பாட்டு சொல்லுவேன் நீ என்னவென்றால் இரண்டு-வரியா? அதுவும் ஆறு மணி நேரமா?

அடுத்த வாரம், இரட்டைக் குதிரை வண்டி வீட்டின் முன்னால் வந்து நின்றது. வண்டியில் வந்த செட்டியாரின் ஆட்கள் சபாபதி பிள்ளையிடம் பிரசங்கத்திற்கு நீங்கள் வேணாமாம். உங்கள் தம்பிதான் வேணுமாம் செட்டியார் சொல்லி அனுப்பினார் என்றனர். சபாபதிக்கு ஒன்றும் புரியவில்லை.

தம்பி இராமலிங்கம் செட்டியார் அழைக்கிறார். போய் படிச்சிட்டு வா என்று சொன்னார் அண்ணன். தம்பி போனதும், சபாபதிப் பிள்ளை யாருக்கும் தெரியாமல் பின் தொடர்ந்து போனார். ஸ்தம்பித்துப் போய் கூட்டத்தில் ஓரமாக உட்கார்ந்து கொண்டார். ஆயிரக்கணக்கான கூட்டம்.

சுவாமிகள் திருஞானசம்பந்தரைப்போல் மேடையில் அமர்கிறார். தவளமேனி, பவளவாய் திறக்கின்றார், வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, பூத பரம்பரை பொலிய, புனிதவாய் என்றார். நமது வாய் மனிதவாய், அவருடைய வாய் புனிதவாய் அழுகையில் இரண்டுவகை, தனக்கென்று அழுவது ஒருவகை, உலகம் வாழவேண்டும் என்பது ஒருவகை, தனக்கென்று திருடிச்சென்று சிறைக்குப் போனால் சிறுமை, தேசம் விடுதலை அடைய வேண்டும் என்று சிறைக்குப் போனால் பெருமை. இவ்வாறு வேதாகமங்களையெல்லாம் உதாரணமாகச் சொல்லி ஆறு மணி நேரம் ஞான மழை பொழிந்தார்.

தமையனார் பார்க்கின்றார் இவன் நம்ம தம்பியா அன்றிச் சேக்கிழாரா, திருவள்ளுவரா, ஞானசம்பந்தரே அவதாரம் செய்திருக்கின்றாரா, என்றெல்லாம் எண்ணி வியந்தார். அடிகளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமை சென்னை மாநகரம் முழுவதும் பரவியது. பின்னர் அவர் அடிக்கடி திருவொற்றியூர் சென்று வடிவாம்பிகையும், ஒற்றீசப் பெருமானையும் சேவித்து வருவார். இத்தகு சிறப்புற்ற திருவொற்றியூரில் " நெல்லிக்கா பண்டாரத் தெருவில் " ஒரு சந்நியாசி திகம்பரராக (ஆடை இல்லாமல்) அமர்ந்திருந்தார். கோயிலுக்கு போவோர் வருவோரை எல்லாம் பார்த்து ஆடுபோவுது, மாடு போவுது, நாய்போவுது, நரிபோவுது, கழுதை போவுது என்பாராம். ஒரு நாள் வள்ளலார் போனார் அவரைப் பார்த்து அதோ மனிதன் போகின்றான் என்றாராம். வள்ளலார் ஒருவர் தான் அவர் கண்களுக்கு மனிதனாகத் தெரிந்திருக்கின்றார்.

வள்ளலார் அருள் நிறைந்த புனிதர்.

திருவொற்றியூரில் ஒரு நாள் மண்டபத்திலே படுத்திருக்கின்றார் வள்ளலார். அப்போது கள்ளனொருவன் வந்து அவரது காதிலுள்ள கடுக்கனைக் கழற்ற முயன்றான். ஏழை பிழைத்துக் கொள்ளட்டும் என்று கருணை காட்டி இன்னொரு கடுக்கனையும் கழட்டிக் கொள்ள வசதியாக தூக்குவதுபோல் திரும்பிப் படுத்தார். கழற்றிக் கொண்டான்.

இவர் பொருளாசை இல்லாத புனிதர்.

மற்றொரு நாள் பாதி ராத்திரியில் தமையனார் வீட்டுத் திண்ணையில் படுத்தார் பசி, பாவம் தூக்கம் வரவில்லை. திருவொற்றியூரிலே வாழ்கின்ற "வடிவுடையம்மை" அண்ணியார் வடிவில் வந்து பாலும் சோறும் கொடுத்தாளாம். இதனை சுவாமிகளே சொல்கின்றார்.

" அன்றொரு நாள் நம்பசிகண்டு அந்தோ தெரியாது
நள்ளிரவில் சோறளித்த நற்றாய்காண் " – என்கின்றார்.

அப்போது இராமலிங்கர் காலத்தில் சிறுவர் சிறுமியர் படிக்கும் உரைநடை நூல்கள் தமிழில் இல்லை. அந்த குறையை நிவர்த்தி செய்ய தமிழில் உரைநடை நூல் ஒன்று எழுதுமாறு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் (ஆசிரியர்) இராமலிங்கரிடம் தெரிவித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவருடைய விருப்பத்துக்கு இசைந்து "மனுமுறை கண்ட வாசகம் " எனும் பெயரில் இராமலிங்கம் உரைநடை நூல் ஒன்று எழுதினார்.

அக்காலத்தில் தொண்ட மண்டலம் என்பது சரியா, அல்லது தொண்டை மண்டலம் என்பது சரியா என்பது குறித்து அடிகள் காலத்தில் பெரும் விவாதம் வித்துவான்களிடையே நடந்தது. அவர்களால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை தொண்ட மண்டலம் என்பதே சரி என்று விளக்கி இந்த வீண் விவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

வாலிப பருவத்திலேயே இராமலிங்கரின் பெயர் பிரபல்யமாகி விட்டதால் அவரிடம் மாணாக்கராக விருப்பம் கொண்டு பலர் வந்தனர். அவர்களுள் " வித்வான் தொழுதூர் வேலாயுத முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரிசுந்தரம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இளமை பருவத்திலிருந்தே இராமலிங்கர் பொருள் ஈட்டுவதில் நாட்டம் கொள்ளவில்லை. பொருள் வேண்டுமானால் செல்வச் சீமான்களிடம் சென்று அவர் கேட்பதும் இல்லை. அப்படி யாசிக்க வேண்டிய அவசியம் நேருமாயின் இறைவனிடம் யாசிக்க வேண்டுமே தவிர பணம் படைத்தவர்களிடம் யாசிக்கக் கூடாது என்று இராமலிங்கர் அறுதியிட்டு கூறியுள்ளார்.

இவருக்கு திருமணம் செய்துகொள்ள விருப்பம் இல்லா திருந்தும் தாயார், தமக்கையார், சகோதரர் முதலியோரின் விருப்பத்திற்கு இசைந்து தம் தமக்கையார் உண்ணாமுலையின் மகள் "தனம்மாள்" என்பவளை இராமலிங்கர் மணந்து கொண்டார். திருமணம் ஆயிற்று எனினும் இல்லற இன்பத்தில் நாட்டம் கொள்ளாது இராமலிங்கர் ஒதுங்கி இருந்தார்.

இவர் பெண்ணாசை இல்லாத புனிதர்.

இந்த காலக் கட்டத்தில் இராமலிங்கர் "திருவாசகம்" என்னும் தெய்வத்தமிழ் நூலை மனம் தோய்ந்து படித்தார். அதனைப் படித்து படித்து அகத்திலும் புறத்திலும் ஆனந்தம் பெற்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருநாள் நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு சென்னையில் உள்ள வியாசர்பாடியில் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்திவிட்டு சென்னை திரும்பினார். இராக்காலம் வழியில் பாம்பு ஒன்று வரவே உடன் வந்தவர்கள் பயந்து அப்பால் ஓட இராமலிங்கம் அந்த இடத்தை விட்டு அகலாமல் சிறிது நேரம் நின்றார். வந்த பாம்பு அவர் காலை பின்னிக்கொண்டது. அஞ்சாமல் இராமலிங்கர் சும்மா நின்றார் பாம்பு ஒன்றும் செய்யாமல் அப்பால் போய்விட்டது. மெய்யடியார்களுக்குக் கொடிய உயிர்களும் ஊறு செய்யாது என்னும் உண்மை இந்த நிகழ்ச்சி மூலம் நமக்கு தெரிகிறது.

இவர் அருள் நிறைந்த புனிதர்.

மேலும், சென்னையின் சுற்று வட்டாரத்தில் இருக்கும் பல தலங்களை தரிசித்து அந்தந்தத் தலத்து இறைவன் இறைவி மீது பாடல்கள் பாடியுள்ளார். சமரச நோக்கத்துடன் சிவபெருமான், திருமால், அம்பிகை, முருகன் முதலிய தெய்வங்கள் மீது பாடல்கள் பாடியுள்ளார்.

சிதம்பரம் இவருக்கு அளவற்ற ஈடுபாடு அவர் தம்மை **“சிதம்பரம் இராமலிங்கம்”** என்று பெருமையுடன் எப்போதும் கூறிக்கொள்வார். ஆகவே, சென்னையை விட்டு சிதம்பரம் சென்று இராமலிங்கர் வசிக்க விரும்பினார். சீடர் சிலரையும் நண்பர் சிலரையும் அழைத்துக் கொண்டு அவர் சிதம்பரத்திற்கு புறப்பட்டார். சென்னையைவிட்டு இராமலிங்கர் சிதம்பரத்திற்கு பயணப்பட்டபோது அவருக்கு வயது “முப்பத்தைந்து” வழியில் திருக்கோயிலில் வழிபாடு செய்து கொண்டு பிரயாணம் செய்தார்.

வழியில் இருக்கும் புதுச்சேரியில் நீடாராஜப்பையர் வீதியில் “விஸ்வநாத ஐயரின்” விருப்பப்படி சில தினங்கள் தங்கினார். அன்பர்கள் சிலருக்கு அங்கு, தமிழ் பாடம் கற்பித்தார். பிறகு சிதம்பரத்தை அடைந்தார். அங்கே எழுந்தருளி இருக்கும் நடராஜப் பெருமான் மீதும், அம்பிகைமீதும் பல தோத்திரப் பாடல்களைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடினார். அந்த காலத்தில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் சிதம்பரத்தில் வசித்தார். இவர் இராமலிங்கரை சந்தித்து உரையாடி உள்ளார். இராமலிங்கரின் சீடர்களும், பக்தர்களும் அவருக்கு எதிரே உட்கார அஞ்சி ஒதுக்குபுறமாகவே எப்போதும் இருப்பதை கவனித்த சுந்தர சுவாமிகள் காரணம் என்ன என்று சீடர்களை விசாரித்தார். அதற்கு ஒரு பக்தர் இராமலிங்க அடிகள் தன் எதிரே இருப்பவர்களின் ஆற்றலை ஈர்த்துக்கொள்ளும் வல்லமை படைத்தவர் அதனால் அவர் எதிரே அமர்வதற்கு யாருக்கும் துணிவு வருவது இல்லை என்று பதில் சொன்னார் இராமலிங்கரை இனி அடிகள் என்றே அழைப்போம்.

சொற்பொழிவு செய்யும் பொருட்டு அடிகள் ஒருமுறை சீர்காழி சென்றார். அம்மன் கோயிலில் சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு அந்த ஊரில் குன்ம நோயால் ஒருவர் நெடுநாள்களாகச் சிரமப்படுகிறார் என்பது தெரிந்து, அவரை வாட்டும் நோயை திருநீறு அளித்து குணப்படுத்தினார். வள்ளலாரின் வாழ்வும் போதனைகளும் திருமூலரையும், தாயுமானவரையும் பெரும் பாலும் பின்னணியாக கொண்டுள்ளன என்று சன்மார்க்கிகள் கூறுவர். திருமூலரைப் பின்பற்றியே அடிகளும் நமது உடம்பை பொன்னே போல் காப்பது கடமை என்று அழுத்தமாக கூறியுள்ளார்.

இரும்பு, செம்பு போன்ற உலோகங்களை தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்றும் வித்தைக்குத்தான் 'ரசவாதம்" என்று பெயர். இராமலிங்க அடிகளும் ரசவாதத்தில் ஈடுபட்டு இருந்தார் என்று தெரிகிறது. தெற்கே இருக்கும் மதுரை முதலிய தலங்களைத் தரிசித்து விட்டு மருதூருக்கு அண்மையில் இருக்கும் கருங்குழி என்னும் சிற்றூருக்கு அடிகள் வந்தார்.

எங்கே " நான் " இல்லையோ அங்கே இறைவன் இருப்பான். காய்கறியில் "தான்" இருந்தால் குழம்பு. "தான்" இல்லையாயின் ரசம். இந்த "தான்" என்பது அற்றுப்போக வேண்டும். வள்ளலாருக்கு (மாணிக்கவாசகரிடத்தில்) " திருவாசகத்தில் " அதிக ஈடுபாடு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவத்திலே பதினோரு மந்திரங்கள் உண்டு.

1. ஓம் ஈசானாய நம
2. ஓம் தத் புருஷாய நம
3. ஓம் அகோராய நம
4. ஓம் வாமதேவாய நம
5. ஓம் சத்யோஜாதாய நம

இவ்வைந்தும் பஞ்சப் பிரம்ம மந்திரங்கள்

6. ஓம் இருதயாய நம
7. ஓம் சிரசே நம
8. ஓம் சிகாயை நம
9. ஓம் கவசாய நம
10. ஓம் நேத்ராய நம
11. ஓம் அஸ்த்ராய நம

இவ்வாறும் சடங்க மந்திரங்கள்

இந்த பதினோரு மந்திரங்களும் "சம்மிதா " மந்திரங்கள். இந்த பதினோரு மந்திரங்களுக்குத்தான் " நம்பியாண்டார் நம்பிகள்" பதினோரு திருமுறைகளை வகுத்தார். அவர் மறைந்த ஓராண்டுக்கு அப்பாலே பெரியபுராணம் எழுந்தது. அப்போதிருந்த "அனபாயச் சோழன்" பெரிய புராணத்தைப் பஞ்சாட்சரமாக வைத்துப் பன்னிரு திருமுறைகளாக வகுத்தான். அதில் எட்டாவது மந்திரம் "சிகாயை மந்திரம்" எட்டாந் திருமுறை "திருவாசகம்" அதனால் வள்ளலார் சிகாயை மந்திரமான திருவாசகத்தை சிறிய பனையோலையில் எழுதிச் சுருட்டி " குடுமியிலே " கட்டியிருந்தார். யாராவது திருவாசகம் பாடினால் அப்படியே மூர்ச்சித்து விடுவார் அத்தனை ஈடுபாடு அவருக்கு கருணையே ஜீவநாடி.

தனது ஞான நூலாக திருவாசகத்தை எடுத்துக் கொண்டார். தனக்கு ஞான குருவாக திருஞான சம்பந்தரை ஏற்றுக் கொண்டார். அதனால் தான் வள்ளலார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

" வான்கலந்த மாணிக்கவாசகா நின்
வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் "

என்ற பாடலை மனம் தோய்ந்து பாடியுள்ளார் அடிகள்.

தெய்வத்தின் பேரால் பலியிடுவதை வள்ளால்பெருமானார் பல இடங்களில் கண்டித்திருக்கின்றார். கடவுளுக்கு எல்லா உயிர்களும் குழந்தைகள். சுவாமிக்கு முன்னர் ஆடு, கோழிகளையெல்லாம் பலியிடலாமா பலியிடுவது பெரிய பாவம் எந்த உயிரையும் தின்று பசியாறக்கூடாது. ஜீவகாருண்யம் இல்லையானால் அவனை ஞானி என்று சொல்லாதே. மோட்ச உலகத்தின் திறவுகோல் ஜீவகாருண்யம் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கவேண்டும். அந்த உயிர்களுக்கு வருகின்ற இடர்களை அகற்ற வேண்டும். பசி என்று வந்தால் யாராக இருந்தாலும் அன்னமிடவேண்டும். எந்த நோய் வந்தாலும் எவரும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் பசி நோய் வந்தால் ஒரு வினாடி கூட தாங்கிக்கொள்ள முடியாது.

இந்த உலகத்தில் கண்ணில்லாதவன் உண்டு, காதில்லாதவன் உண்டு, மூக்கில்லாதவன் உண்டு, வாயில்லாதவன் உண்டு, கையில்லாதவன், காலில்லாதவன் ஏன் அறிவில்லாதவனும் உண்டு. ஆனால் வயிறில்லாதவன் எங்கும் இல்லை அரசனுக்கும் வயிறுண்டு. ஆண்டிக்கும் வயிறுண்டு. மூடனுக்கும் வயிறுண்டு, ஞானிக்கும் வயிறுண்டு அந்த வயிற்றுக்குச் சோறிட வேண்டும்.

" ஏது மித்தனை தான மிடாதவர்
ஏழ்நரகு உழல்வாரே "

என்று அருணகிரிநாதர் கூறுவார்.

" பசித்தோர் முகம் பார் " என்பது பட்டினத்தடிகள் வாசகம்

" இவ்வளவேனும் இட்டுண்மின்" என்பார் ஔவைப் பெருமாட்டி.

வள்ளலாரின் உயிர்நாடியே பசியாற்றுதல். வடலூரில் சத்திய தருமசாலை கட்டி சுவாமிகள் தன் திருக்கரங்களாலேயே அன்னத்தை அள்ளி வழங்குவாராம் வடலூர் பெருவெளியில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

" உடம்பு வளர சத்திய அன்ன தருமசாலை "
" உயிர் வளர சத்திய ஞான சபை "
" உணர்வு வளர தர்மவேத பாடசாலை "
முதலியவற்றை ஏற்படுத்தினார்.

நம்முள் இருக்கும் 36-தத்துவங்களும் ஒருமையுடன் இருக்க வேண்டும். அநேகம் பேர் "மை" வைத்து ஆளை வசப்படுத்து-வார்கள். ஆண்டவனுக்கும் நாம் ஒரு "மை" வைக்க வேண்டும் என்று " ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று பாடினார். கல்லைத் தண்ணீரில் போட்டால் அழுந்திவிடும் கட்டையைப் போட்டால் மிதக்கும். ஆனால் ஓர் அம்மிக் கல்லை ஒரு கட்டையில் வைத்தால் கட்டை மிதப்பதனாலே அந்த கல்லும் மிதக்கும் கட்டையைச் சார்ந்த கல் மிதப்பதைப் போல், அடியார்களைச் சேர்ந்தால்தான் பிறவிப் பெருங்கடலில் மிதந்து போவேன். ஆக, அடியார்கள் உறவுதான் உயர்ந்தது என்று கூறுகிறார்.

அண்ணா நிரம்ப நல்லவர் ஆயிரம் மாற்றுத் தங்கம் என்பான். அவர் அப்புறம் போனவுடனே ரொம்ப மோசமான ஆள் என்பான். "உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் "

பெருமானே மற்ற புகழெல்லாம் இன்றைக்கு வரும். நாளைக்குப் போகும்.

" பெருமையைபெறு நினது புகழ் பேச வேண்டும் "

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு "

– என்பார் திருவள்ளுவர்.

ஆண்டவனோடு பழகுகின்றவர்கள் பொய்யை விட்டு விட வேண்டும்.

பொய்வளரும் நெஞ்சினர்கள் கணாத காட்சியே

– என்பார். தாயுமானவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொய் தங்கு நெஞ்சிற் கொடியாள்

– என்பார் கம்ப நாட்டாழ்வார்.

சத்தியம்தான் நித்தியம் எக்காரணத்தை கொண்டும் பொய் சொல்லக் கூடாது. ஆகவே,

" பொய்மை பேசாதிருக்க வேண்டும் "

பிறர் பொருளை விரும்பக்கூடாது. ஒரு மனைவியோடு வாழவேண்டும் பக்தி நெறியிலே வாழ வேண்டும். இப்படிப்

" பெருநெறி பிடித்தொழுக வேண்டும். "

நான்தான் இந்தக் குடும்பத்துக்குத் தலைவன் நான்தான் நிறைய படித்தவன் என்ற

"மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் "

"மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் " பெண்ணை மறக்கச் சொல்லவில்லை. பெண்ணாசையை மறக்கச் சொன்னார் பெண் வேறு, பெண் ஆசை வேறு. இராவணன் தன் மனைவியுடன் வாழ்ந்திருந்தால் அழிந்திருக்க மாட்டான். பிறன் மனைவியை விரும்பினான் அடியோடு அழிந்து போனான். ஆகவே, அவரவர் தத்தம் மனைவியோடு இல்லறமாகிய நல்லறத்தை நடத்த வேண்டும். நம்முடைய பக்தி நெறிக்கும், முக்தி நெறிக்கும் துணை செய்பவள் மனைவி அதனால்தான் திருவள்ளுவர் " வாழ்க்கை துணை நலம் " என்றார். எனவே,

மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்.

இருட்டை போக்க வேண்டுமானால் விளக்கு ஏற்ற வேண்டும். விளக்கைக் கண்டால் இருள்போகும் நெருப்பைக் கண்டால் பனிபோகும். அதுபோல இறைவனை தியானம் செய்தால் ஆசாபாசங்கள் விலகும். அதனால்,

" உனை மறவா திருக்க வேண்டும் "

" மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும் "

ஆண்டவனே நான் நோயில்லாத வாழ்வு வாழ வேண்டும்.

" நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும் என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பனே அருள் எங்கே எப்பொழுது கிடைக்கும். அந்தோ நாள் ஒவ்வொன்றாகக் கழிகின்றதே என் செய்வேன் என்று ஏங்கினார். அழுதார், தொழுதார், அலறினார், உலறினார் பொழுது விடிந்து பொழுது போனால் என் வாழ்நாளில் ஒரு நாள் போனதே. இப்படி ஒரு நாளன்று, இருநாளன்று பலநாள் பரிதவித்தார். ஒருநாள் இரவு நடுயாமம் எங்கும் நிசப்தம், பித்தரும், பத்தரும், முத்தரும் உறங்குகின்ற அமைதி குடிகொண்டிருக்கின்ற நேரம்.

அந்த நள்ளிரவில் மேட்டுக்குப்பத்தில் சித்தி வளாகம் என்ற குடிசையில் இராமலிங்க அடிகளால் மட்டும் உறங்காது இரங்கினார். அம்பலத்தில் ஆடுகின்ற எம்பெருமானே சிறியேன் படுகின்ற வேதனையைத் தேவரீர் அறிந்திலீரோ எங்கும் நிறைந்த இறைவனே.

எனக்கு, என்றும் தந்தையும் தாயும் நீர்தானே. மகனாகிய என்னை இப்படி தவிக்க விடலாமா. இது நின் கருணைக்கு அழகா, அப்பனே அருட்கடலே ஆனந்தக் கூத்தனே இவ்வண்ணம் அழுது தொழுது அங்ஙனமே மண்மேல் வீழ்ந்து மூர்ச்சித்து விட்டார். ஆண்டவர் அருள் வடிவம் கொண்டு வந்தார். வந்தது யாரென்று வள்ளலாருக்குத் தெரியாது. தூங்குபவர்களுக்கு யார் வந்தார்கள் என்று தெரியாது தானே.

உள்ளம் உணர்வு உரை முதலிய எல்லாம் ஒடுங்கி அவச முற்றிருக்கின்ற வள்ளலாரை எம்பெருமான் தமது தாமரைத் திருக்கரங்களால் எடுத்தார். முகத்தைத் துடைத்தார் செங்கரத்தை சென்னிமிசை வைத்தார். இதற்கெல்லாம் சுவாமிகளே சான்று கூறுகின்றார்.

" பிரணவத்தின் அடிமுடியின் நடுவினுநின் றோங்கும்
பெருங்கருணைத் திருவடிகள் பெயர்ந்து வருந்திடவே
கரணமுற்று நடந்தடியேன் இருக்குமிடந் தேடி
கதவுதிறப் பித்தருளிக் கடையேனை அழைத்து "

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நட்டானை நட்டவெனை நயந்துகொண்ட
நம்மகன் நீ அஞ்சலென நவின்றென் சென்னி
தொட்டானை எட்டிரண்டும் சொல்லினானைத்
துன்பமெலாம் தொலைத்தானைச் சோர்ந்து தூங்க
ஒட்டானை மெய்யறிவே உருவாய் என்னுள்
உற்றானை உணர்ந்தார்க்கும் உணர்ந்து கொள்ள
எட்டனை என்னளவில் எட்டினானை
எம்மானைக் கண்டு களித்திருக் கின்றேனே

– என்கிறார் வள்ளலார்

வள்ளலார் கண்விழித்துப் பார்த்தார். ஒளிமயமான ஈசனைக் கண்டார். ஆண்டவனே எளியேனையும் ஒரு பொருளாக எண்ணி இப்பாதி இரவில் வந்தீரே கருணைகடலே அப்பனே உன் அருள் பெறாது அல்லல்பட்டுத் தவிக்கிறேன் என்று தொழுதார்.

சுவாமி உடனே மின்னல்போல் ஓர் ஒளியை உண்டாக்கினார். அந்த ஒளியே தானேயானார். அவ்வொளியான அருட்பெருஞ் ஜோதி வள்ளலார் கண் வழி புகுந்தது. ஊன், உள்ளம், உணர்வு, உயிர் இவைகளில் கலந்து விட்டது. அந்த அருள் மின்சாரம் பாய்ந்ததும் வள்ளலாருக்கு உண்டாகிய இன்பத்திற்கு எல்லையே கிடையாது. ஊன் குளிர்ந்தது, உள்ளம் குளிர்ந்தது. உணர்வு குளிர்ந்தது. சொல்ல முடியாத ஆனந்தம் பரிபூரண இன்ப வெள்ளம் பொங்கி ததும்பி வழிந்தது.

பின்னர் அடிகளார் முன்னையினும் பன்மடங்கு மீறிய துன்பமுற்று அழுதார். ஐயனே என்று அலறினார். எம்பெருமான், இராமலிங்கம் இப்போது நீயும், நானும் ஒன்றுபட்டு கலந்து நிற்கின்றோமே. அருளமுதை அள்ளி வழங்கினேனே இந்தப் பேரின்ப நிலையை வழங்கியபின் ஏன் அழுகின்றாய் என்று வினவினார்.

அடிகளார், ஆண்டவனே அருளாரமுதம் அடியேனுக்குக் கிடைக்கவில்லையே என்று முன்னே துன்பமுற்றேன். உமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பேரருளை பெற்றபின் முன்னிலும் அதிகம் மனம் துன்புறுகின்றது. இத்தகைய இன்பம் மற்ற உயிர்களுக்கு கிடைக்கவில்லையே ஆன்மாக்கள் அவமே திரிந்து அலைந்து கெடுகின்றனவே. அந்தோ இந்த இன்பம் என்போல் எல்லோரும் பெறவேண்டாமா இந்த இன்பம் எனக்கு மட்டும் வந்தால் போதுமா அண்டசராசரங்கள் எல்லா உயிர்களும் இந்த இன்பத்தை பெற வேண்டாமா என்றார்.

ஒருமுறை " விவேகானந்தர் " அமெரிக்காவில் வேதாந்த மழை பொழிகின்றார் அமெரிக்காவே அவரை வாழ்த்துகிறது. ஒரு செல்வந்தர் அவரை அழைத்துச் சென்று பாதபூஜை செய்து உபசரித்து அனைத்து வசதிகளும் கொண்ட ஓர் அறையில் தங்க வைக்கின்றார்.

அடுத்த நாள் காலை செல்வந்தர் வந்து அறைக்கதவைத் தட்டாது சன்னல் வழி பார்க்கின்றார் விவேகானந்தர் வெறுந் தரையில் அமர்ந்துகொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார். செல்வந்தர் விசாரிக்கின்றார். அதற்கு விவேகானந்தர் என் இந்திய நாட்டு ஏழைகள் உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்கப் பாயும் இன்றிப் பரிதவிக்கின்றார்கள். எனக்கு மட்டும் இத்தனை சுகமா என்றாராம். அமெரிக்காவிலே இருக்கின்ற விவேகானந்தர் இந்தியாவில் உள்ள ஏழைகளை எண்ணிப் பார்க்கின்றார்.

அதுபோல், வள்ளல்பெருமானார் இந்த இன்பம் எனக்கு மட்டும் கிடைத்தால் போதுமா ரிக்ஷா இழுப்பவனுக்குக் கிடைக்க வேண்டாமா, விறகு வெட்டிப் பிழைப்பவனுக்குக் கிடைக்க வேண்டாமா, அதற்காகத்தான் அழுகிறேன் பெருமானே, முந்தி என் பொருட்டு அழுதேன். இப்போது உலக உயிர்கள் எல்லாவற்றுக்கும் அழுகிறேன் என்றார். அவருடைய கருணைதான் என்னே அப்போது அவரே பாடிய பாடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதி இரவில் எழுந்தருளிப்
பாவியேனை எழுப்பியருட்
ஜோதி அளித்தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப
நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ்
உலகம் பெறுதல் வேண்டுவனே

– என்கிறார்.

உயர்ந்த ஞானத்தமிழ், பாதி இரவில் எழுந்தருளி, பெரியோர்களை எழுந்தருளி என்று சொல்ல வேண்டும். திருக்கோயில்களில் சுவாமி எழுந்தருளியாச்சா என்று கேட்க வேண்டும். சுவாமி தூங்கியாச்சா என்று கேட்கக் கூடாது.

நம்முடைய பிராண வாயு பன்னிரண்டங்குலம் வெளியே போகிறது எட்டங்குலம் தான் உள்ளே போகிறது.

ஒருவர் ஜவுளிக்கடை வைத்தார். எண்ணாயிரம் ரூபாய் வரவு வந்தது. பன்னிரண்டாயிரம் ரூபாய் செலவு செய்தார். இப்படி வரவுக்கு மேலே செலவு செய்தால் கடை காலியாகி விடுமல்லவா? அப்படி விடுகின்ற காற்று பன்னிரண்டு அங்குலமாகி, உள்ளே இழுக்கின்ற காற்று எட்டு அங்குலம் என்றால் இழப்பு நான்கு அங்குலமல்லவா? இப்படியே இழப்பு கூடிப்போனால் இந்த உடலாகிய கடையை எமன் வந்து பூட்டி விடுவான்.

“ ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியதுவாமே ”

– என்பார் திருமூலர்.

ஆகவே பிராண வாயுவை அவமே செலவழிக்காமல் அதை உள்ளுக்குள்ளே அடக்கியாள வேண்டும். அப்படி அடக்கி ஆண்டதால்தான் “ ஞானிகள் ” நீண்ட காலம் வாழ்ந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனை ஆழமான செம்பொருள்கள். யாரொருவர் "சிவாயநம" என்று சொல்லித் திருநீறு பூசுவார்களோ அவர்களுக்கெல்லாம் என்ன கிடைக்கும் தெரியுமா?

" பாடற்கினிய வாக்களிக்கும்
பாலும், சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தம்
கூட்டம் அளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே நீ
அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற்கினிய சீரளிக்கும்
சிவாய நமவென் றிடுநீறே "

இதே கைகளால் திருநீறு பூச வேண்டும் இதே கைகளினாலே பெருமானை அர்ச்சிக்க வேண்டும். ஆண்டவனை ஊனுருக உயிருருகப் பாடி அம்பலவாணா, கனகசபாபதி என்று அழுதால் அனுக்கிரகம் செய்வார்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்பார் மாணிக்கவாசகர். நீங்கள் தலைகீழாக நிற்க வேண்டியதில்லை. பட்டினி கிடக்க வேண்டியதில்லை. பூஜையில் கண்ணீர் விட்டு அழுதால் போதும். தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும்.

அழுதால்தானே அம்மா பால் கொடுப்பாள் ! அழுத குழந்தைதானே பால் குடிக்கும். குழந்தைக்கு ஏதாவது வேண்டும் என்றால் என்ன செய்கிறது அழுகிறது. அப்போ, மக்களுக்கு தெய்வம் மாதா, பிதா தன் தெய்வமாகிய அப்பா, அம்மாவிடத்திலே அழுது குழந்தை நலம் பெருகிறது.

மனைவிக்கு தெய்வம் மணவாளன் தன் தெய்வமாகிய மணவாளனிடத்தில் அழுது மனைவி நலம் பெறுகிறாள். அதுபோல் நாமும் ஆண்டவனிடத்தில் அழுது நலம் பெற வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

“ காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ” சீர்காழியில் குழந்தை அழுதது. அப்பா சொல்லி அம்மா வந்து பால் கொடுத்தார்கள்.

“ வள்ளலாரும் ”

“ கூழுக் கழுவேனோ கோத்தணிகைக் கோவே என்
ஊழுக் கழுவேனோ ஓயாத் துயர்பிறவி
ஏழுக் கழவேனோ என்செய்கேன் என்செய்கேன்
பாழுக் கிறைத்தேன் ஈதுன் செயலோ பார்க்குமிடம் ”

என்று அழுது, தொழுது வள்ளலாரும் பாடுகிறார்.

வள்ளல்பெருமானார் கருங்குழியில் வேங்கட ரெட்டியார், முத்தியாலு அம்மாள் இல்லத்திலே தங்கி நான்கு திருமுறையில் அருட்பாவைப் பாடினார். ஒவ்வொரு பாட்டும் உலகை விலை மதிக்கும் “ மெய்ஞ்ஞானப் பாடல்கள் ” அப்போது “தண்ணீரில் விளக்கெரித்தார் ”

கருங்குழியில் வள்ளலார் வசித்த காலத்தில் பாலு ரெட்டியார் என்பவர் குஷ்ட நோயால் அவதியுற்றார். அடிகள் மருந்து கொடுத்து குணப்படுத்தியுள்ளார்கள். கடலூர் அப்பாசாமி செட்டியார் தமையனுக்கு நாக்கு புற்றினையும் மருந்து கொடுத்து குணப்படுத்தியுள்ளார்கள்.

முத்து நாராயண ரெட்டியார் என்பவர் கண்பார்வை குறைந்து சிரமப்பட்டார். அடிகள் அதையும் மருந்து கொடுத்து குணப்படுத்தியுள்ளார்கள் இதனால் மகிழ்ச்சி அடைந்த முத்து நாராயண ரெட்டியார் தமது நிலம், வீடு, சொத்து முழுவதையும் வள்ளல்பெருமானுக்கு எழுதி வழங்க முன்வந்தார். அடிகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். கருங்குழியில் இருக்கும் பெருமாள் கோயிலுக்கு சொத்தை எழுதி வைக்குமாறு அடிகள் கட்டளையிட்டாராம். அதன்படி முத்து நாராயண ரெட்டியார் செய்தாராம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வள்ளலார் மண்ணாசை இல்லாத புனிதர்,

அதேபோல், யாழ்பாணம் "ஆறுமுக நாவலர்" அவர்கள் சைவத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர் தேவார திருவாசகப் பாடல்களைப் பெரிதும் போற்றி மதித்தவர். திருவருட்பாப் பாடல்களை மக்கள் தேவார திருவாசகங்களுக்கு நிகராகப் போற்றிக் கொண்டாடுவது ஆறுமுக நாவலருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆகவே அவர் திருவருட்பா எனக் கூறலாகாது என்று மறுப்புத் தெரிவித்தார்.

அதனால் தமிழ்நாட்டில் இரு கட்சிகள் உருவாயின. திருவருட்பா எனும் பெயரை ஆதரித்தவர்களுக்கு அருட்பாக் கட்சியினர்" என்று பெயர். அந்த பெயரை மறுத்தவர்களுக்கு "மருட்பாக்கட்சியினர்" என்று பெயர்.

ஆறுமுக நாவலர் மருட்பாக் கட்சிக்குத் தலைமை தாங்கி விவாதத்தில் ஈடுபட்டார். சிலகாலம் அருட்பா – மருட்பா விவாதம் தமிழ்நாட்டில் தீவிரமாய் இருந்தது பிறகு வரவர ஆர்வம் குன்றி வாக்குவாதங்கள் ஓய்ந்து போயின. இறுதியில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராலே திருவருட்பா கட்சி வெற்றிபெற்றதாம்.

திரு நறும்குன்றம் என்னும் ஊரில் "கல்பட்டு ஐயா " என்னும் யோகியார் ஒருவர் இருந்தார்.

சீடன் குருவைத் தேடிச்செல்வது சிறப்பா அல்லது தக்க சீடனைத் தேடிக் கொண்டு குரு வருவாரா !

இரண்டுமே வாழ்க்கையில் நிகழ்வது உண்டு "கல்பட்டு ஐயா " நினைத்தார் குருவே தம்மை நாடி வந்து ஆட்கொள்ள வேண்டும் என்ற விருப்பமுடன் இருந்தார்.

அடிகள் கல்பட்டு ஐயாவை அணுகி அவரைத் தனது சீடர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்பட்டு ஐயா தனது இறுதிக் காலம் வரை வடலூரில் வாழ்ந்தார். அவருடைய சமாதியும் வடலூரில் உள்ளது.

சுவாமிகளிடத்தில் வந்து தீராத நோயெல்லாம் தீர்த்தவர் பலர் வேட்டவலம் ஜமீன்தாரின் மனைவிக்கு வந்த மகோதரத்தைத் தீர்த்தார். அஷ்டமா சித்திகளும் அவருக்கு கைகட்டி பணிசெய்யும் சித்திகளுக்கெல்லாம் அப்பாலே சென்று முத்திநெறி காட்டுகின்ற முனிவராகத் திகழ்ந்தார்.

எல்லாம் இறைவனுடைய எழுத்துப்படித்தான் நடக்கும். நம் தலையில் பிரம்மா எழுதுகின்றார்

இதனை " வள்ளலார் " பாடுகின்றார்.

" தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யான்
தாதாதா என்றுலகில் தானலைந்தோம் – போதாதா "

ஏழு தா – எழுதாக் குறைக்கு என் செய்வேன் நான் தாதாதா என்று தான் அலைந்தோம் போதாதா.

தமிழ் கொஞ்சுகிறது. அதிமதுரத்தமிழ் அதனால்தான் அது "திருவருட்பா"

இறைவன் ஜோதி வடிவானவன் உள்ளுக்குள்ளே இருந்து காட்சி தருவான். அது ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி. அதுதான் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை.

உருவ வழிபாடு இருந்தால் மக்களுக்கு பிணக்கு வரும். ஜோதி வழிபாடு என்றால் பிணக்கு வராது. ஆன்மிகப் பசியை அகற்ற அடிகள் புதிய ஒரு வழிபாட்டு முறையை அமைத்தார்கள் அதற்கு "ஜோதி தரிசனம்" என்று பெயர். தொன்று தொட்டே மக்கள் பலவித வழிபாட்டு முறைகளை அனுசரித்து வருகிறார்கள். உருவத்தை வைத்து வழிபாடு செய்வது ஒருமுறை.

இந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், கத்தோலிக்கக் கிருஸ்தவர்கள் ஆகியோர் " உருவ வழிபாடு " செய்பவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இஸ்லாமியர்கள், ஆரிய சமாஜிகள், பிரமோ சமாஜிகள், ஜெயினர்களும் " அருவத்தை " வழிபாடு செய்பவர்கள்.

சௌராஸ்திரிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் "நெருப்பை " வழிபடுகிறார்கள்.

" சீக்கியர்கள் " கிரந்தசாகிப் " என்னும் நூலை வைத்து இறைவனை வழிபடுகிறார்கள்.

வள்ளலார் " ஜோதி தரிசனம் " செய்வதை வழிபாட்டு முறையாக அமைத்து, இறை வழிபாட்டுக்கு அடிகள் ஏற்பாடு செய்தார்கள் (1872-ல் கொண்டு வந்தார்கள்.)

கி.பி. 634 லிருந்து 650 வரை 7-ம் நூற்றாண்டு 16-ஆண்டுகள் வாழ்ந்து, திருமண நல்லூரிலே ஜோதியிலே கலந்த ஞான சம்பந்தப் பெருமான் ஜோதியைப் பற்றி

" ஆதி அந்தம் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே
ஜோதி அந்தம் ஆயினாய் ஜோதியுள்ளோர் ஜோதியாய்
கீதம் வந்த வாய்மையால் கிளர் தருக்கினார்க்கு அலால்
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்து உரைக்கல் ஆகுமே

என்று பாடுகிறார்.

கி.பி. 575 லிருந்து 656 வரை 6,7 நூற்றாண்டு 81 ஆண்டுகள் வாழ்ந்து, திருப்புகலூரிலே இறைவன் திருவடியில் சேர்ந்த திருநாவுக்கரசர் ஜோதியை பற்றி

"சொற்றுணை வேதியன் " ஜோதிவானவன் "
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே " – என்று பாடுகிறார்.

கி.பி. 701 லிருந்து 718 வரை 8-ம் நூற்றாண்டு 18-ஆண்டுகள் வாழ்ந்து கைலாயத்துக்கு திருவஞ்சிக் களத்திலே இருந்து சென்ற சுந்தரர் பெருமான் ஜோதியை குறித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கற்பகத்தினை கனகமால்வரையை
காமகோபனை கண்நுதலானை
சொல்பதப்பொருள்இருள் அறுத்து அருளும்
" தூய ஜோதியை" வெண்ணெய்நல்லூரில்
அற்புதப் பழ ஆவனம் காட்டி
அடியனா என்னை ஆள் அதுகொண்ட
நல்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. "

– என சுந்தரர் ஜோதியைப் பற்றி பாடுகிறார்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் இறைவனைப் பற்றி

"ஜோதியே " சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பனைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே"

– என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

சித்தர்களில் முதல் சித்தர் சிவவாக்கியர்
ஜோதியை பற்றி கூறும் போது
" ஜோதிஜோதி" என்று நாடித் தோற்பவர் சிலவரே
ஆதிஆதி என்று நாடும் ஆடவர் சிலவரே
வாதிவாதி என்று சொல்லும் வம்பரும் சிலவரே
நீதி நீதி நீதி நீதி நின்றிடும் " முழுச்சுடர் "

– என்று குறிப்பிடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பட்டினத்தார் தன் பாடலில் குறிப்பிடும்போது

" ஜோதியான் " சூழ்பனிநீர் சூறைகொளும் ஆறேபோல்
நீதிகுருவின் திருத்தாள் நீ பெற்றமாய் நெஞ்சமே
வித்தாய் மரமாய் வெளியாய் " ஜோதியாய் "
சத்தாய் இருந்த தரம் அறியேன் பூரணமே "

– என்று குறிப்பிடுகிறார்.

இடைக்காட்டுச் சித்தர் தன் பாடலில் குறிப்பிடும்போது,

" ஆதிபகவனையே அன்பராய் நினைப்பாயேல்
" ஜோதி " பரகதி தான் சொந்தமது ஆகாதோ
சந்திரசேகரன் தாள்தாழ்ந்து பணிவாயேல்
இந்திரன் மான் முதலோர் ஏவல் புரிவரே "

– என்று கூறியிருக்கின்றார்.

திருமூலநாயனார் தன் பாடலில் குறிப்பிடும்போது

" தெளிவரிய பாதமது அகாரமாகி
சிற்பரமும் தற்பரமும் தானேயாகி
அழிவரிய "ஜோதியது" தானேயாகி
அடிநடுவு முடியாகி அமர்ந்து நின்று
மொழிவரிய முதலாகி மூலமாகி
" முச்சுடரும் " தானாகி முடிந்த " ஜோதி "
சுழியினிலே முனையாகி கோபமாகிச்
சொல்லரிய வெழுத் தொன்றே தொகுத்துப் பாரீர்

– என்று குறிப்பிடுகிறார்.

எல்லோரும் ஒப்பி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஜோதி வழிபாட்டை அடிகள் நடைமுறைப்படுத்தினார்கள். அருட்பெருஞ்ஜோதி வழிபாட்டுக்காக அடிகள் ஞானசபை என்னும் பெயரில் எண் கோண வடிவில் கட்டிடம்ஒன்றை அமைத்தார்கள். அதன் வாயில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அருட்பெருஞ் ஜோதிக்கு முன்னே ஏழு திரைகள் தொங்கும். **கருப்பு, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், வெள்ளை, கலப்பு நிறம்** ஆகிய நிறங்களில் வரிசையாகத் திரைகள் உள்ளன. ஏழு திரைகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகற்றியதும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தரிசனம் கிட்டும் 25-1-1972-ம் ஆண்டு அருட்பெருஞ்ஜோதி வழிபாடு நடைபெற்றது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டு தைப்பூசத்தன்று ஜோதிதரிசனம் நடைபெறுகிறது.

ஜோதி தரிசனம் எதைக் குறிக்கிறது?

இறைவன் அருவிலும் இருப்பான், உருவிலும் இருப்பான், என்பதை அறிவிக்கிறது. இருளில் மறைந்து கிடக்கும் பொருளை விளக்கின் துணைகொண்டு காண்பதுபோல ஜோதியின் துணை கொண்டு அதாவது அறிவின் துணைகொண்டு ஒருவன் இறைவன் இருப்பதை அறிய வேண்டும் என்பதை அறிவிக்கிறது. வெறும் அறிவினால் மட்டும் இறைவனை அறிவது எளிதன்று. அருள் உள்ளத்தின் மூலமே இறைவனை உணர முடியும் " அறிவும், அருளும் " இல்லாமல் இறைவனை யாரும் அறிய முடியாது என்பதை வள்ளலார் மிகத் தெளிவாக நமக்கு கூறியிருக்கின்றார்.

இராமலிங்க அடிகள் பொதுப் பணிகள் செய்யும்போது கருங்குழியில் வாழும் காலத்தில் சங்கம் ஒன்றை கண்டார்கள் அடிகள். ஆகவே மத அடிப்படைகளைக் கொண்டே மத ஒற்றுமையை மக்களிடையே உருவாக்குவது அவசியம் என்பதை அடிகள் உணர்ந்தார்கள். இந்து பெரியவனா, முஸ்லீம் பெரிய-வனா, சைவம் பெரியவனா, சமணம் பெரியவனா, என்னும் கருத்தை உள்ளீடாகக் கொண்டு ஒருவனுடன் ஒருவர் தொடர்போ உறவோ கொள்ளக்கூடாது என்பது அடிகளின் கருத்து. மனிதனிடம் மனிதன் தொடர்பு கொள்ளும்போது எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள் என்னும் பெருநோக்குடன் உறவுகொள்ள வேண்டுமே யன்றி, இந்து, முஸ்லீம், சமணம், சைவன், என்னும் குறுகிய எல்லைக்குள் நின்று செயல்படுவது பிழை என்று அடிகள் முடிவுக்கு வந்தார்கள். அந்த பிழையை அகற்றும் பொருட்டே "சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை " நிறுவினார்கள்.

சன்மார்க்கத்தை அங்கீகரிக்கும் அன்பர்களை ஒன்று கூட்டி 1865-ல் தனது 42-ம் வயதில் அடிகள் சங்கத்தை நிறுவினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈயம், செம்பு முதலிய உலோகங்களை சொக்கத் தங்கமாக்கி சீடர்களுக்கும், அன்பர்களுக்கும் தெரிய வள்ளலார் கிணற்றிலே போடுவது உண்டாம். இதைக்கண்டு ஆச்சரியமுற்ற அன்பர்கள் அடிகளை நோக்கி ஐயா ! தாங்கள் ஏன் தங்கத்தை கிணற்றில் எறிகிறீர்கள் என்று கேட்டார்களாம்.

“ தேவைப்படும்போது இறைவன் கொடுப்பான் என்று அடிகள் சுருக்கமாக பதில் சொன்னார்களாம்.

தேவைக்கு அதிகமாக பொருள் சேர்த்து வைத்திருப்பது “இறை நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும்” என்பது அடிகளின் கருத்து

“ இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றினான், ”

“ ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு ”

– திருவள்ளுவர்.

இந்த இரு குறளும் இரத்தலின் இழிவையும் ஈதலின் சிறப்பையும் வலியுறுத்துவதைக் காணலாம்.

இறைவா ! பிறரிடம் சென்று யாசிக்காத தகுதியை எனக்கு நீ அருள்புரிய வேண்டும். பிறர் வந்து என்னிடம் யாசிக்கும்போது இல்லை என்று மறுக்காத இயல்பை எனக்கு நீ அருள வேண்டும் என்று வள்ளலார் இறைவனிடம் விண்ணப்பம் செய்கிறார்.

பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. கீழ்வரும் வெண்பாவைப் படித்தால் பசியினால் நொந்து வாடும் மனிதனை விட்டு என்ன என்ன பண்புகள் நீங்கும் என்பது தெரியும்.

“ மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை
தானம், தவம், முயற்சி, தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம். ”

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே மனிதன் முதலில் மனிதனாக வாழ வேண்டுமாயின் பசிக் கொடுமையை அகற்றுவது அவசியம். இந்த அரிய, பெரிய உண்மையை மனதில் கொண்டு அடிகள் பசியின் கொடுமையை போக்குவதற்கு அன்னம் பாலிக்கும் சத்திய தருமசாலை ஒன்றை 23-5-1867-ல் வடலூரில் நிறுவினார்கள். வயிற்றுப் பசியை போக்கிக்கொள்வது மனிதர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் தவிர்க்க முடியாத ஒரு தேவை. அந்த தேவையை பூர்த்தி செய்து கொள்வதோடு மட்டும் மனிதன் திருப்தி அடைவதில்லை. இதுதான் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையே காணப்படும் முக்கிய வேறுபாடு.

வயிற்றுப் பசியைத் தவிர்த்து வேறு இரு பசி மனிதனுக்கு உண்டு. ஒன்று அறிவுப்பசி மற்றொன்று ஆன்மிகப்பசி அடிகள் காலத்தில் தமிழ் சமுதாயத்தில் வயிற்றுப்பசி, அறிவுப்பசி, ஆன்மிகப் பசி ஆகிய மூன்று பசிகளையும் அகற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்புகள் இருந்தன. அதனால்தான் மூன்று பசிகளையும் அகற்றிக் கொள்ளக் கூடிய நிலையங்களை நிறுவி அடிகள் வழிகாட்டி உதவினார்.

நம் நாட்டு மக்களிடையே வழக்கத்தில் 16 வகையான தானங்கள் உள்ளது.

1. அன்னதானம், 2. கோதானம்,
3. வஸ்தரதானம், 4. பூதானம்,
5. கன்னிகாதானம், 6. உபயமுகிதானம்
7. பொன்தானம், 8. மகிஷதானம்
9. வருடைதானம், 10. குதிரைதானம்
11. அவேதாஸ்வதானம் 12. கஜமுகிதானம்
13. காளாமுகிதானம் 14. மஹாமேருதானம்
15. கற்பக விருட்சதானம் 16. வித்யாதானம்

இவ்வகை 16-தானத்தில் முதலாவதானதானம் அன்னதானத்தை வள்ளலார் நடைமுறைபடுத்தினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு நாள் இரவு சாப்பாடு நேரத்தில் தர்மச்சாலைக்கு நூறு பேர் அதிகமாக வந்துவிட்டனர். அன்னசாலை நிர்வாகி சண்முகம் பிள்ளை ஒன்றும் தோன்றாது தயங்கி நின்றார். இதை கவனித்த அடிகள் அவரிடம் " பிச் " தயங்காது இலை போடும் "சாதம் காணும்" என்று சொன்னார்கள். அதன்படி சண்முகம் பிள்ளை செய்தார். வந்திருந்த அனைவரும் திருப்தியுடன் சாப்பிடும் அளவு சாதம் தட்டுப்பாடு இன்றி இருந்தது.

சாத்திரங்களைப் படித்து தோத்திரம் செய்து வழிபடுவதைக் காட்டிலும் சீவகாருண்ய ஒழுக்கம் சிறந்த நெறியாகும் என்பது அடிகளின் கருத்தாகும்.

அடிகள் செய்த உபதேசங்களுள் தலையானது "ஜீவ காருண்ய ஒழுக்கம் " தம் உயிர்போல் பிற உயிர்களையும் நேசித்து, அவைகளுக்கு நேரும் துன்பங்களை துடைக்க, நேர்மை உள்ளத்தோடு நம்மால் இயன்றவரை முயல்வதே ஜீவகாருண்யம் எனப்படும்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்துக்கு முதல்படியாக அமைந்திருப்பது " புலால் உண்ணாமை " ஆகும். புலால் உண்ணாதவர்களை அக இனத்தார் என்றும், புலால் உண்பவர்களை புற இனத்தார் என்றும், சன்மார்க்க அன்பர்கள் குறிப்பிடுவார்கள். சடங்குகள் மூலம் இறை வழிபாடு, கோயில் வழிபாடு, ஆகியன செய்வதைக் காட்டிலும் புலால் உண்ணாமை மூலமும் ஜோதி வழிபாட்டின் மூலமும் ஒருவன் மேலான கதியைப் பெறலாம் என்பது அடிகள் கொண்ட முடிவான கருத்து எனலாம்.

ஆண்டவனை அடைவதற்கு நான்கு மார்க்கங்கள்

அவன் ஆண்டான் நாம் அடிமை
" தாச மார்க்கம் "

இதைவிட கொஞ்சம் உயர்ந்தது
அவன் தந்தை நமெல்லாம் அவனது குழந்தைகள்
" சத்புத்ர மார்க்கம் "

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதைவிட கொஞ்சம் நெருக்கம்
சுவாமியை நமக்குத் தோழனாகப் பாவிப்பது
" சக மார்க்கம் "

அதைவிட நெருக்கம் நாயகி நாயக பாவம். சுவாமி கணவனார் நாமெல்லாம் சுவாமியுனுடைய மனைவிமார்கள். மனைவியைவிட நெருங்கியவர் வேறு யார்
" சன் மார்க்கம் "

உள்ளத்தில் உண்மைப் பிடிப்பு இல்லை நெஞ்சத்தில் இரக்க உணர்வு இல்லை. இத்தகைய கசட்டு மனிதர்களே அதிக அளவில் நாட்டில் நடமாடுவதைக் கண்டு அடிகள் உள்ளம் வெதும்பினார்கள். இத்தகைய மனிதர்களைச் சந்தியாது இருப்பதே நலம் என்னும் கருத்து நாளுக்கு நாள் அடிகளுக்கு வலுப்பெற்று வந்தது. ஆகவே மேட்டுக்குப்பத்தில் இருக்கும் சித்திவளாக மாளிகைக்குள் கதவை தாளிட்டுக் கொண்டு பெரும் பொழுதை அடிகள் கழித்தார்கள். தாம் தரிசனம் கொடாது தனித்து இருப்பது உண்மைச் சீடர்களின் உள்ளத்துக்கு உவப்பாய் இராது என்று கருதி, இடையிடையே மாளிகையை விட்டு வெளியே வந்து தரிசனம் தந்து உபதேசம் செய்வார்களாம்.

ஐம்பது முடிந்து அடிகளுக்கு ஐம்பத்து ஓராவது வயது நடந்துகொண்டு இருந்தது. கருங்குழியிலும், வடலூரிலும் அடிகள் ஏறக்குறையப் பதினெட்டு ஆண்டுகள் வசித்தார்கள்.

1867-ல் வடலூரில் சாலையை நிறுவிய அடிகள் சுமார் ஏழு ஆண்டு காலம் அந்த வட்டாரத்தில் வசித்து உபதேசம் செய்தார்கள்.

வள்ளலார் ஜோதி வழிபாட்டையும், அருட்பெருஞ்ஜோதி மந்திரத்தையும், சமரச சுத்த சன்மார்க்கத்தையும், சாகாப் பெரு நெறிக்கு சன்மார்க்க ஒழுக்கத்தையும், சன்மார்க்க கொடியையும் நமக்கு அருளியுள்ளார்கள்.

திருந்தி நல்ல முறையில் வாழப் பிரியப்படாதவர்களுடன் தொடர்புகொண்டு வாழ்வது வீண் என்ற முடிவுக்கு அடிகள் வந்தார்கள். ஆகவே தமது உடம்பை மறைத்துக் கொள்வது என முடிவு செய்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்தியிலே மூன்று வகை :-

உருவ சித்தி :-

இந்த உடம்போடு உருவசித்தி பெறுதல்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான்நாயனார் போன்றோர் கைலை சென்றது.

அருவ சித்தி :-

இந்த உடம்பே இல்லாமல் கரைத்து விடுதல், மாணிக்கவாசகர் இந்த உடம்பே இல்லாமல் கரைத்துவிட்டார். திருவிசயநல்லூர் ஸ்ரீதர் ஐயங்கார் அவரும் அப்படித்தான். ஆலயத்தின் உள்ளே போனார் திரும்பி வரவேயில்லை. பிரணவதேகம் பெற்றவர்கள் இந்த உடம்பையே ஞானமயமாகக் கரைய ஜோதியிலேயே கலந்து விடுவார்கள்.

உருவருவச் சித்தி :-

தன் உடம்பைச் சிவலிங்கமாக்கி விடுதல். பட்டினத்துச் சுவாமிகள், சிற்றம்பல நாடிகள் முதலியோர் தம் உடலைச் சிவலிங்கமாகச் செய்தனர்.

ஆனால், வள்ளல்பெருமானார் பிரணவ தேகம் பெற்றார் என்பதை சுவாமிகளே கூறியிருப்பதால் அறியலாம்.

" காற்றாலே புவியாலே கனகமதனாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே
கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்.
எந்தையருட் பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே "

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடைசியாக சுவாமிகள் திருவாய் மலர்ந்த திருப்பாடல்

" பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேனே "

– என்று அருளியுள்ளார்.

ஆகவே, தமது உடம்பு இறைவனோடு கலந்து விட வேண்டும் என முடிவு செய்தார்கள்.

1874–ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ந்தேதி வெள்ளிக்கிழமை அன்று தைப்பூச நன்னாள். தை மாதம் முதல் ஆனி மாதம் முடியவுள்ள ஆறு மாத காலத்தை " உத்தராயணம் " என்று சொல்வார்கள். இந்த அறு மாத காலத்தைத் தேவர்களுக்கு ஒரு பகல் என்று கூறுவர். ஏனெனில், தேவர்கள் விழித்து இருப்பதாக ஓர் ஐதீகம்.

ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறு மாத காலம் தேவர்களுக்கு இரவு பொழுது ஆகும். இந்த ஆறு மாத காலத்திலும் தேவர்கள் உறங்குவதாக ஓர் ஐதீகம். அதைத் " தட்சிணாயணம் " என்று குறிப்பிடுவர்.

தேவர்கள் உறங்கும் காலத்தில் எந்த நல்ல காரியத்தையும் வைதீகர்கள் செய்ய மாட்டார்கள்.

தேவர்கள் விழித்திருக்கும் புண்ணிய காலத்தில் இந்த மண்ணுலக வாழ்விலிருந்து பூத உடம்பை மறைத்துக்கொள்ள அடிகள் முடிவு செய்தார்கள். ஆகவே தைப்பூசத்தன்று சித்திவளாக மாளிகையைத் திறந்து கொண்டு அடிகள் வெளியே வந்தார்கள். தாம் கையில் வைத்திருந்த தீபத்தை மாளிகைக்குப் புறத்தே வைத்து விட்டு அங்கு குழுமி இருக்கும் மக்களுக்கு பேருபதேசம் செய்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜோதியே கடவுள் என்பதை உலகிற்கு உணர்த்த சத்திய ஞான தீபத்தை ஏற்றி அதனை வழிபடச் செய்தார்கள்.

இந்தத் தீபத்தை வழிபடுங்கள். கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு மாளிகைக் கதவை தாளிட்டுக் கொண்டார்கள்.

30-01-1874-ம் ஆண்டு மேட்டுக்குப்பத்தில் ஸ்ரீமுக வருடம் தை மாதம் சுக்கிரவாரம் புனர்பூசமும் பூசமும் கூடிய பூர்வ ராத்திரியில் (நள்ளிரவு 12.00 மணியளவில்) தம் அடியார்களைப் பார்த்து சிலகாலம் உங்களுக்குத் தோன்ற மாட்டேன் என்று கூறி அறைக்குள் சென்று திருக்காப்பிட்டுக் கொண்டார்.

அந்த மாளிகைக்குள்ளேயே அடிகளின் திருவுருவம் மறைந்து விட்டது. அதன் பின்னர் அடிகளின் பூத உடம்பை யாராலும் பார்க்க முடியவில்லை. சுவாமிகள் திருவருள் மயத்திலே நின்று அந்த பஞ்சீகர விதிப்படி அந்தந்தப் பொறிகளும், புலன்களும் ஒடுங்க ஐந்து பூதங்களும், ஐந்து பூதங்களில் ஒடுங்க அருட்பெருஞ்ஜோதியில் இரண்டறக் கலந்து விட்டார்.

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வாழ்க வளமுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy